மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்
காட்டம்பட்டி ஊராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம் ஊராட்சி / ஒன்றியம்,

காட்டம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்: 259, 260/1 – ல்

அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1 : 400

இணைய வழி எண் : MME380BP

வ

குறிப்பு

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு (பத்திரப்படி) : 7.25 ½ஏக்கர் (29359.70 ச.மீ)

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு (பட்டாவின்படி) : 29400.17 ச.மீ

கோரிய மனைகள் : 142

ஒதுக்கிய மனைகள் : 137

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடு

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியவை:

மனைப்பிரிவு சாலை : 8672.67 ச.மீ

பூங்காவிற்கு தேவையான பரப்பு = (மனைப்பிரிவு பரப்பு – மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 10 %

= (29359.70 - 8672.67) x 10 % = 2068.70 ச.மீ

பூங்காவிற்கு ஒதுக்கிய பரப்பு

பூங்கா = 2094.74 ச.மீ

பொது ஒதுக்கீடான

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு -I பரப்பு

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு – மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 0.5%

(29359.70 - 8672.67) x 0.5% = 103.43 ச.மீ

ஒதுக்கிய பரப்பு : 105.76 ச.மீ - 0.51 %

TANGEDCO - க்கு (அ) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு -II பரப்பு

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு – மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 0.5%

(29359.70 - 8672.67) x 0.5% = 103.43 ச.மீ

ஒதுக்கிய பரப்பு : 114.48 ச.மீ - 0.55 %

E.W.S ஒதுக்கீடு

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு – மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 10%

(29359.70 - 8672.67) x 10 % = 2068.70 ச.மீ

ஒதுக்கிய பரப்பு : 2279.63 ச.மீ - 11.02 %

(மனை எண்கள் : 96–134)

மூலை முடக்கு : 12.0 மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்

1. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வடிகால் (MA) துறை, நாள் 04–02–2019 ன்படி மனைப்பிரிவில் அமையும் சாலை (ம) பொது உபயோகம் தானமாகவும் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வடிகால் (MA) துறை, நாள் 31–01–2020 ன் படி TANGEDCO -கான பரப்பு ஒதுக்கீட்டினை TANGEDCO / உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்க வேண்டும்.

2. இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்யப்பட வேண்டும்.

3. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 60 cm X 120 cm அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

6. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து வ.வ.அ / ஒன்றிய பொறியாளரிடம் தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

7. அரசாணை எண்: 181 வி.வ (ம) கு.வ துறை 09–12–2020 – ன் படி உத்தேச மனைப்பிரிவில் தார் சாலை மழைநீர் வடிகால் வசதி , மேல்நிலை நீர் தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெரு விளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் தகுதிகேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

ம.வ கோ.உ.தி.கு எண் : 73/2024
திட்ட அனுமதி எண் : 59/2024 } இணைய வழி

Signature Not Verified
Signed by Smt. Director
Location: Coimbatore
Date: 2024.02.29

சீ.கவுதமி
இணை / உதவி வரைவாளர்

த.கண்ணன்
வரைவாளர் நிலை-III

இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்–கோயம்புத்தூர்
கோயம்புத்தூர்